# தேட்டம்

சுவர் சஞ்சிகை - 2001/02



முத்தமிழ் கலா மன்றம்
அரசினர் ஆசிரியர் கலாசாலை,
யதன்சைட், கொட்டகலை.

# நூலைப் பற்றி......

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | தேட்டம் |
| திரட்டு | : | இரண்டு |
| உரிமை | : | முத்தமிழ் கலா மன்றம் |
| பக்கங்கள் | : | 60 |
| அச்சிடப்பட்ட நூல்களின் தொகை | : | 500 |
| விடயம் | : | கவிதை, சித்திரம். |
| வெளியீடு | : | முத்தமிழ் கலா மன்றம்,<br>அரசினர் ஆசிரியர் கலாசாலை,<br>கொட்டகலை. |
| காகிதத்தாளின் அளவு | : | 16.5 - 22.5 mm |
| காகிதத்தாளின் தன்மை | : | 70 கி பேங்க். |
| அட்டைப்படம் | : | திரு. T. நவரட்ணஜோதி |
| கணனி வடிவமைப்பு | : | செல்வி. ந. உமாவதனி |
| அச்சுப்பதிப்பு | : | ஹில்பிரைன் அச்சகம்,<br>132, திம்புள்ள வீதி,<br>மல்லியப்பு,<br>அட்டன். |

# தேட்டம்

சுவர் சஞ்சிகை

# 2001/02

வெளியீடு:


**முத்தமிழ் கலா மன்றம்**

*அரசினர் ஆசிரியர் கலாசாலை,*

*யதன்சைட்,*

*கொட்டகலை.*

# சமர்ப்பணம்



மலையக சிறுகதை முன்னோடி
அமரர். என்.எஸ்.எம்.ராமையாவுக்கு
இந்நூல்
சமர்ப்பணம்

# முதல்வரின் வாழ்த்துச் செய்தி.

காலத்திற்கு காலம் புதிய படைப்புகளை வெளிக்கொணரும் இக்கல்லூரி இவ்வாண்டும் தனது இரண்டாவது முயற்சியாக தேட்டம் நூலை வெளியிடுகின்றது. எனவே இப்படைப்புக்காக ஆசிச் செய்தி வழங்குவதில் நான் பெருமைப்படுகின்றேன்.

படைப்பாளிகளின் சுதந்திரமான கருத்தாக்கங்களை சுந்தர படைப்பாக வெளிக் கொணர்வதுதான் இத்தேட்டம் சுவர் சஞ்சிகை. இதில் ஒவ்வொரு படைப்பாளிகளினதும் எண்ணங்கள் கவிதைகளாகவும் ஓவியங்களாகவும் வெளிவந்து மிளிர்வது இதன் சிறப்பம்சமாகும்.

இந்த முயற்சியின் ஆரம்ப கர்த்தாவான இவ்வாசிரியக் கல்லூரியின் முன்னால் அதிபரும், எழுத்தாளருமான சு. முரளிதரன் அவர்களையும் இந்நூல் தொடர்ந்து சிறந்த முறையில் வெளிவர வழிநடத்திக் கொண்டிருக்கின்ற விரிவுரையாளர்கள் திரு. லெனின் மதிவானம், திரு. ஜெ. சற்குருநாதன், திருமதி. சந்திரலேகா கிங்ஸ்லி ஆகியோருக்கும், இவற்றிற்குதன்னுடைய பூரண ஒத்துழைப்பையும் நல்கும் முத்தமிழ் கலாமன்ற தலைவர், செயலாளர், பொருளாளர், பத்திராதிபர் மற்றும் உறுப்பினர்கள் எல்லோரையும் மனமார பாராட்டுகின்றேன். இம்முயற்சியினூடாக மலையக கலை, கலாசார, பாரம்பரியங்கள் பேணப்படவும் எதிர்கால சந்ததியினர் பயன்பெறவும் இந்நூல் சிறந்த பணியாற்றும் என்று நம்புகின்றேன்.

'சிறந்த முயற்சியே வெற்றியின் அடித்தளம்'

திரு. செ. ஜெயகுமார்
முதல்வர்

# பிரதி முதல்வரின் வாழ்த்துச் செய்தி.

கலாசாலையின் முத்தமிழ் கலாமன்ற வெளியீடான தேட்டம் சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்க சந்தர்ப்பம் கிடைத்தமையையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இறைவன் மனிதனைப் படைத்தான். மனிதன் இன்புற்றிருக்க கலைஞனையும் படைத்தான். மனிதனின் உணர்வுகளுடனும் சிந்தனைத் துளிகளும் ஒன்றிணைந்தது கலையிலக்கியம்.

நல்ல கலைஞன் ஒருவரிடமும் வஞ்சகமில்லை, வக்கிரப்புத்தியோ, வன்முறையோ இராது. நீடிய சாந்தமும், நல்ல எண்ணங்களுமே அவன் நெஞ்சத்தில் குடியிருக்கும் இதனால் தான் இன்றைய இளைஞர் சமுதாயம் கெட்டழிந்து போகாமல் பாதுகாக்க அவர்கள் மனதில் கலையுணர்வை வளர்க்க வேண்டும், ஊக்குவிக்க வேண்டும். இதன் பலனாக நல்ல கலைஞர்கள் எதிர்காலத்தில் உருவாகின்ற சந்தர்ப்பம் கிடைக்கும். நாடும் செழிக்கும் நாமும் செழிப்போம். நல்ல கலைஞர்கள் உருவாக நல்ல ஆசான்கள் உருவாக வேண்டும் என்று கூறி கலாமன்றத் தலைவர் உறுப்பினர்களின் முயற்சிகளுக்கு பாராட்டுத் தெரிவிப்பதோடு நூல் நலம் பெற்று சிறப்புற மலர நல்லாசிகளும் வாழ்த்துக்களும்.

ப. ஸ்ரீதரன்
பிரதி முதல்வர்

## பொறுப்பு விரிவுரையாளர் சில அவதானங்கள்.

'கலையும் இலக்கியமும் மக்களுக்காகவே' என்ற சமூக பிரக்ஞையுடன் ஆரம்பிக்கப்பட்ட 'தேட்டம்' சஞ்சிகையின் இரண்டாவது இதழ் வெளிவருகின்றது.

சமரசத்தையே அடிநாதமாக கொண்டுமுகிழ்ந்திருக்கின்ற அண்மைக்கால கலை, இலக்கிய பண்புகள், முகடுத்தட்டில் போனதோர் எல்லைப் பரப்பில் தன்னை நிலைநிறுத்துவது தற்செயல் நிகழ்ச்சியல்ல.

மறுபுறமாய் பார்த்தால்! மானுட ஸ்பரிசம் கொள்ளும் விருதுகளும், வேர்களும் புதியதோர் நாகரிகத்திற்காய்! தன்னை இவ்வாறு புனரமைத்துக் கொள்கின்றன.

''எனது நம்பிக்கை திசைகளில்
எனது கொடிகள் முறிகின்றன
முன் மொழியப்பட
இனி ஒரு தேசியமில்லை!
ஆனால்
எங்கும் உண்டு
என்
தோழமை மக்கள்! (இன்குலாப்)

இப்போக்கின் யதார்த்தத்தில் கால்ப்பதித்து நிற்கும், இந்த மஞ்சள் மைனாக்கள், சமூக முரண்களை நியாயப்படுத்தல், சமரசம் செய்தல், அழகுபடுத்தல் எனும் புண்மைகளை தாண்டி இதயம் நிறைந்த நம்பிக்கையுடனும், கூடவே கர்வத்துடனும் தமக்கான ஒளிக்கீற்றை தேடுகின்றார்கள்.

துளிர்விட்டுக் கொண்டிருக்கும் இத்துளிர்கள், கிளைகளாக மாறும் என்ற நம்பிக்கை உள மகிழ்ச்சியை தருகின்றது.

வாழ்த்துக்களுடன்,
லெனின் மதிவாணம்.

# தலைவரிடமிருந்து........

ஒரு தேசத்தினதோ, மக்களினதோ வரலாற்றை இன்னொரு தலைமுறைக்கு எடுத்துச் சென்று அவற்றின் மீதான பதிவுகளை இத்தகையதாக ஒவ்வொரு காலகட்டத்திலும் எம் கலாசாலையில் இருந்த கவிஞர் குழாத்தின் சுவடுகளைச் சுமந்து நிற்கும் சுவர் சஞ்சிகையாக தேட்டம் விளங்கி நிற்பது மகிழ்வூட்டுகிறது. இங்கு காணப்படும் அதிகமான கவிதைகள் ஒடுக்கப்படும் ஒரு மக்கள் கூட்டத்திற்கு தைரியம் அளிப்பதாகவும் வழி நடத்துவதாகவும் அமைந்திருப்பதை அவதானிக்கும்போது இளைய கவிஞர்கள் மீதான நம்பிக்கை திடமூட்டுகின்றது.

வீறுமிகு கவிதைகளையும் சமூக அவலங்களையும் சித்தரிக்கும் ஓவியங்களையும் சுமந்துவரும் தேட்டம் சுவர் சஞ்சிகையின் இரண்டாவது இதழை இவ்வருடம் வெளியிட ஆலோசனை வழங்கிய அதிபர், பிரதிஅதிபர், உபஅதிபர், முத்தமிழ்கலாமன்ற பொறுப்புவிரிவுரையாளர்கள், செயலாளர், பொருளாளர், பத்திராதிபர், முத்தமிழ்கலாமன்ற உறுப்பினர்கள் மற்றும் இந்நூலினை அச்சிட்டுத்தந்த ஹில்பிரைன் அச்சகத்தாருக்கும், கணனி வடிவமைப்புச் செய்த சகோதரி செல்வி.ந.உமாவதனி அவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதோடு இந்நூல் சிறப்பாக வெளிவர உளங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கொ. சுந்தர்ராஜ்
முத்தமிழ் கலாமன்றம்.

# மாணவப் பேரவை தலைவரின் எண்ணங்கள்.......

விரியமான சிந்தனைகளில் வேகமான அறுவடையாக அமையும் தேட்டம் சஞ்சிகையின் ஆக்கங்கள், மண்ணை, மக்களை நேசிப்பதனையிட்டு எண்ணைப் புலங்காகிதம் அடைகின்றேன். தேட்டம் சுவர் பலகையில் இடம் பெற்ற ஆக்கங்கள் இங்கு நூலாக வெளிவருகின்றமையினால் பலரின் பார்வைக்கு முன்வைக்கப்படுகின்றன.

இவ்வாக்கங்கள் இரண்டு விதமாக பண்புகளை உணர்த்தி நிற்கின்றது.

1. இம்மண்ணுக்கே உரித்தான குணாதிசயங்களோடு கூடிய வாழ்வியல் அம்சங்கள்.
2. பிற மண்ணுக்குரிய வாழ்க்கை அம்சங்கள் இம்மண்ணில் எவ்வகையில் பரிணாமம் அடைகின்றது என்ற அடிப்படையிலான வாழ்க்கை அனுபவங்கள்.

இப்படைப்பாளிகள் சத்தியத் தேடலில் ஈடுபட்டுள்ளதையிட்டு பெருமிதம் கொள்வதோடு, இம்முயற்சியிலீடுபட்ட அனைவரையும் மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

கே. பிரபாநந்தன்

# பத்திராதிபரின் எண்ணத்தில்..................

இலக்கியத்தின் பரிணாமம் காலத்திற்குக் காலம் புதுமைகளைப் படைத்துக் கொண்டிருக்கின்றது. அந்த புதுமைகளின் ஓர் அங்கமாகத்தான் இந்த தேட்டம் சுவர் சஞ்சிகையும் தனது இரண்டாவது துளியை, இலக்கியத்தினுள் சங்கமிக்கச் செய்திருக்கின்றது.

யதார்த்த உணர்வுகளைக் கருவாகக் கொண்டு செப்பனிட்ட புதுமைகளுடன் காத்திரமான படைப்புகளை இந்த இரண்டாவது தேட்டம் சுவர் சஞ்சிகையினுள் படைப்பாளிகள் படைத்திருக்கின்றார்கள்.

அவர்களின் படைப்புகள் துயரங்களின் கோஷமாகவும், சமூக விழிப்பையும் தேட முனைபவையாகக் காணப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல் இதுவரைக் காலமும் இனங் காணப்படாமலிருந்த புதிய கவிஞர்கள் தம்முடைய ஆக்கபூர்வமான கவிதைகளையும் சித்திரங்களையும் தேட்டம் சுவர் சஞ்சிகைக்கு வழங்கி அதன் வழி தம்மையும் அடையாளப்படுத்திக் கொளகின்றனர். அவர்களின் படைப்புகளுடன் இச்சஞ்சிகை வெளிவருவதையிட்டு பெருமகிழ்வடைவதோடு நூல் வெளிவர சகல விதத்திலும் ஒத்துழைப்பு நல்கியவர்களுக்கு நன்றியினையும் உரித்தாக்குகின்றேன்.



வீ. சசிகுமார்
முத்தமிழ் கலா மன்றம்

**அமரர். சாருமதி பொறுத்த அன்பான நினைவுகளுடன், அவரை இவ்விதழ் பங்காளனாக்கிக் கொள்கின்றது.**

# தனிச் சிங்களப் பெருமைகளும் தமிழ்க் கனவுகளும்

ஒன்றாய்த் தொழில் புரிந்தோம்
ஓர் அலுவலகமே சென்றோம்
என்றாலும் எம்மிடையே
எத் தொடர்பும் இருந்ததில்லை

பண்டா நீ சிங்களவன்
பரம்பரை இன வெறியன்
என்றாலும் நான் குறைவோ?
என் குரலும் தமிழ் ஈழம்

இரண்டாகவே வாழ்ந்தோம்; இன
ரேகை வரை ஓவியமாய்.......
ஒன்றாய் தொழில் புரிந்தும்
ஒவ்வோர் திசை ஆனோம்.
அன்றந்த ஜூனில் மட்டும்
அனைவரும் ஒன்றானோம்
நின்றோம் நாம் தெருவில்
நீண்டொலித்தன நம் கோசங்கள்,

சம்பள உயர்வு கேட்டோம்!
சரிகட்ட முடியா வாழ்வின்
சங்கடச் சுமை அறவே
சம்பள உயர்வு கேட்டோம்!

என்றும் போல் எம்முள்
இனபேத உணர்வுகள்
நெஞ்சை நிறைத்தாலும்
நீண்ட நம் கரங்களினை
கஞ்சிக்காய் கோர்த்து
கர்ஜித்து நின்றோம்.

குண்டர் படைகள்
குதிரைப் படைகள்
எல்லாம்
வந்தெம்மை மோதின.
வரலாற்றில்
அந்தத் தேதி
அழியாது போயின.

கஞ்சி கோரிய
நம் நெஞ்சத்தின்
கவலைகள் பெருகின
ஒன்று இரண்டல்ல

எண்பதினாயிரம் முகங்கள்
இருளில் மூழ்கின.
சோகம் என் முகத்தில்
போர்வையாகக் கிடந்த போதுதான்
அந்தச் சேதி வந்தது.

சிங்களப் பெருமையில்
சிந்தித்து வாழ்ந்த நீ
நஞ்சுடன் கலந்தாயென
நாளிதழ் சொன்னது.
வறுமை தாங்காத் தற்கொலையென
உன் இறப்பிற்கு
வரைவிலக்கணம் கூறப்பட்டது.

இன்றெங்கள் வீட்டில்
இருக்கின்ற பொருளெல்லாம்
ஒன்றொன்றாயப் பறந்து
அன்றாடக் கஞ்சியாய்
ஆகிக் கொண்டிருக்கின்றது.

என்றைக்கு நானும்
உன்னைப் போல்
நஞ்சிடம்
தஞ்சம் புக வேண்டி வருமோ?

வறுமையும் வாழ்க்கையும்
உனக்கும் எனக்கும்
ஒன்றெனபதை என்னால்
இப்பொழுதான்
இனம் காணமுடிகின்றது.
"தனிச் சிங்களப் பெருமைகள்"
உனது தற்கொலையை
தடுக்க முடியாமல் போன போதுதான்
எனது "தமிழ்க் கனவுகள்"
தகரத் தொடங்கின.
என்றாவது ஒரு நாளில்
நமது ஆத்மாக்கள்
ஒன்றாகியே தீர வேண்டும். 1983

# ஆசிரியர்

வே. தினகரன்

ஆண்டவனுக்கு முன்னும்
அன்னை தந்தைக்குப் பின்னும்
நின்று ஆள்பவனே!
ஆசான் காசளனாகவியலாததென்பது
அரசாள்பவரின் விதியே தவிர - உன்
சிரசாள்பவரின் நீதியல்ல!

உலக விழிகளில் - நீ
வானத்தைக் கிழித்து வந்து விழுந்த மனிதன்
விழ விழ முளைக்கும் முதலையின்
பற்களைப் போல் ஒன்று - புதைப்பட
இன்னொன்றை விதைத்தவாறே இருக்கும் உலகம்
பாறைகளை மீறுகையில்தானே
பாயும் ஓடை தெளிவுறுகின்றது!
தலைப் பாறைகளில் சிற்பம் தேடு
சவால்கள் சரண் புகும்
உணர் தோழா!
ஆசிரியரென்போன்
சுடரும் ஜோதியில் நெய்,
அலைகளின் அசைவுகளில் காற்று
வெயிலையும், மழையையும்
விளைவிக்கும் வெய்யோன.

பள்ளம் பாயும் வெள்ளத்திற்கும்
சிட்டுக்குருவியின் செட்டை அடிப்பிற்கும்
கற்றுக் கொடுத்தது யாரென நோக்கு
அங்கு அருவத்தில் தெரியும்
ஆசிரியம் பூச்சொரியும் ஆச்சரியம்.

இடம் பார்த்து ஒளிர்வதில்லை நிலா!
அது ஊர் பார்த்து வருவதில்லை உலா!
உலகை உயரமிருந்து பார்த்து
இன மத எல்லைகளை தகர்ப்பிப்பவன் ஆசான்.
சித்தாந்தன் சிங்களவனாய்த்தான் சிரிக்கின்றான்.

படித்த புயலே!
நேர்மிகு நெஞ்சினாய் நிமிர்ந்து வா!
அஞ்சம் மறந்த மண்ணைப் படைக்க.
கடக்க வேண்டிய கடுஞ் சுவர்கள் மிக அதிகம்.

பத்துக் கோடி செய்தி விழுங்கும் உன் மூளையில்
பாதியில் பாதியையாவது சேகரிப்பு நடாத்து.
மனிதனைப் படிப்பிக்க பன்னிரெண்டு மின்மினிகளால்
ஒளி தந்துதவ முடியுமாம்.....
இறைவனே! நீ உலகினையே விடுவிக்கலாமே!

வல்லமைகளைப் பிணைத்து
அறியாதோன் அறிய ஆண்டவனாகு!
ஆள்பவனாகு!
புதிய உலகினுக்காய் களத்தில் இயங்கு!
உண்மையில் நீ தேவன்!
தேசிகனென்பதில் திருப்தி கொள்.

# சிறகு விரி

ஏ. புனிதகலா

ஊழல் செய்தவனை
உச்சியில் சுமந்து
பெண்மையை ஈனப்படுத்திய
நளாயினிப் பெண்ணாய் - நீ
நலமழிய வேண்டாம்.....

கண்ணிருந்தும் கண்மூடிக்
கணவன் பின் செல்ல
காவியச் சீதையல்ல நீ
விழித்திறந்தும் வழி மாறும்
விசித்திர ராமர்களை
வழி நடத்தும் ஒளிக்கதிர்.

வையம் சிலிர்க்க வைத்த
ஜான்சி ராணி அன்று
வனிதையர் பலர் வென்று
வாழும் கதை இன்று.

காட்சிக்குப் போகாமல் - உலக
மீட்சிக்காகத் - தன்
காருண்ய சிறகடித்து
கருணைச் சேவை செய்து
கனிந்தாள் அன்னை தெரேசா
இனித்தாள் எம் இதயங்களில்....

விளக்கேந்தி சேவை செய்தாள்
நைட்டிங்கேள் எனும் பெண்ணாள்
விளக்கமாய் சொன்ன பின்னும்
வியப்பாய் நீ மலைப்பதென்ன?

இத்தனை சிறகுகளில்
உன் சிறகின் வகையுணர்ந்து
உன்னத நிலையடைய
உறுதியாய் நிமிர்ந்து விடு.

உதறும் உன் சிரிப்பில்
உடையட்டும் கட்டுக்கள்
இன்னும் ஏன் தலைக்கவிழ்ப்பு

மகளிர் பெறா
விடுதலைக் காற்று பெற
உனைத் தயார்படுத்தி
சிறகு விரி!
பிறகு சிரி!

வா என் புயற் பெண்ணே....
உள்ள சிறகசைத்து
இப்போதே பறக்காமல்
உதிர்ந்த பின்
உதவாத எலும்பு பார்த்து
ஒப்பாரி வைப்பாயோ?

அடி பறவைப் பெண்ணே
நின்று கேட்டுச் செல்,
நீ......
சிறகடிக்கும் வானில்
உன்னை
முறைத்துக் கறுக்கும்
ஆண் மேகங்களைக் கண்டால்
எச்சரிக்கை,
ஆம்...... அவை
முகிழ்க்குமோ முழங்குமோ
யார் அறிவார்?.......

பூவையே....
பொய்யான அழைப்பிருக்கும்
போதையுடன் உனைப்
பார்க்கும்
போவது பூசைக்கென்றால்
புன்னகை உதிர்த்து விடு.
அழைப்புகள் காட்சிக்கடி
அடித்துத் துரத்திவிடு.

உன் சிறகுகளை
நீயே சிதைத்துக் கொண்டு
மரபுக் கூட்டுக்குள்
அடைப்பட்ட காலம்
மலையேறிப் போச்சு.
வெளியேறி வா.

அடடா...
அது என்ன
உன் சிறகுகளில்
புராணப் பிசுபிசுப்பு?
அறிவுச் சுடரொளியில்
உலர்த்திக் கொள் விரைந்து

# வேடதாரிகள்

க. காஞ்சனா

உலக மேடையின்
கூத்தாடிகள்
உயிரோட்டமுள்ள
பாத்திரங்கள்
தரப்பட்ட வேடத்தின்
தவணைமுறை
நடிகர்கள்
வந்ததற்காய்
நொந்தவர் சிலர்,
வாழ்க்கை பூங்காவான
வண்டுகள் பல

இவர்கள் தரித்தவை
களைய முடியாதவை

குடும்ப
கூட்டுப்புழுவில்
அம்மா, அப்பா சோதரர்
நண்பர்கள், அன்பர்கள்
இன்னும்
எத்தனை, எத்தனை
படைத்தவனும்
சளைக்கவில்லை
ஒன்றா, இரண்டா
ஓராயிரம்
ஒவ்வொன்றும்
வெவ்வேறுவிதம்

இறப்பும்
இடைவேளைதான்
மீண்டும் பிறப்பு
மிதிப்பட்ட ஜென்மங்கள்

மிஞ்சுவது என்ன?
வினாவிற்கு
விடைதேடியோர்
வினாவாக்கினர்
மனநல மனையின்
மதில்களுக்குள்
புதைந்தனர்

எஞ்சுவது என்ன?
ஏகோபித்த
கோஷங்கள்
திரும்பி
நோக்குகின்றேன்.
வேடதாரிகள்






எஸ். மர்சூக்

நரமாமிசம் உண்ணும்
அரக்கர்களின்
முரட்டுக் குணத்தை
விரட்டி அடிக்க நீ வா!

ஏழ்மையும்
தாழ் நிலையும்
கால் தடம் பதிக்காது
கலங்கரை விளக்காய் நீ வா!

அடிமைத் தனத்தையும்
அடக்கு முறையையும்
புடம் போட
புது மனிதனாய் நீ வா!

பஞ்சமா பாதகங்கள்
பாரினில்
பல்கிப் பெருகுவதை
படுகுழியில் தள்ள நீ வா!

நிற வெறி பிடித்து
உறவுகளைப் பிரிக்கும்
சிறுமைத் தனத்தைப் போக்க
சீறு கொண்டு நீ வா!

மதங்களின் பெயரால்
மனிதர்களைக் கொல்லும்
கெட்ட தனத்தைப் போக்க
மா மனிதனாய் நீ வா!

# புதிய மானுடத்தை நோக்கி ......

திருமதி. ந. ராஜினிப்ரியா

மானிடா........
எழுந்து வா!


சுரண்டப்பட்டதும்
குட்ட குட்ட
குனிந்த போதும்...!

நிதர்சன
உண்மைகளை
நிமிர்ந்துக் கூற
எழுந்து வா .....!

உனக்குக்
கிடைத்தது ஜென்ம சாபம்
என நினைத்தாயோ.....

தளராதே...!
உன் சமூகம் இன்னும்
மரணிக்கவில்லை....
மளைத்துவிட்டது.

தட்டியெழுப்ப
எழுந்து வா .....!



## விழுதுகள்......

இது
கி.பி. 2001
உன்
கிளைகளை
தலைகீழாய்
மண்வயிற்றில்
நடு!
வேர்கள்
விசாலமாய்
வேர் விடட்டும்
விண்ணில்!

## துஞ்சலஞ்சுக!

இனிக்கும்
வயதுகளை
இடித்து(ச்)
சாறெடுத்துக் குடிக்கிறான்
பைத்திய(ம்)
என்றது பார்
சரித்திர வைத்தியர்
வந்தார்
''சாதனை''ப்பசியாம்
அவனுக்கு
பிழைத்துக் கொண்டார்
வைத்தியர்.....

## இருப்பு

அதல பாதாளத்தில்
என்
ஆணிவேரை
ஆழ்த்தி
முளைத்(து)எழுவேன்
விளை(த்)திறனுடன்
செவிப்பறைகள்
சிதைந்து
செத்துப்போவாய் நீ....
என்
மௌன அலறலில்!
காலம்
நிர்வாணம் உடுத்தி
வெட்கிக்கும்
நான்
சோசலிச(ன்)ம்.

## வாய்மை

எழுச்சி
எப்போதும் வீழ்ச்சியில்லை
தாய்மை.

கந்தையா விநாயகமூர்த்தி



# அலைகளின் நடுவே

ச. மாலினி

இந்த மண்ணும் மண்ணுள யாவையும்
இங்கு எங்களின் சொந்தமாகுமாம்.
"தந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
வாழ்ந்ததும் எம்நாடே"
வஞ்சகர் சூழ்ச்சியால் வாழ்வு குலைந்து
அலைவது எம்நாடே - இங்கு
சாவே எமக்க சரித்திரம் ஆனது

ஆளும் வர்க்கத்தால் அடிமை ஆக்கப்பட்டவன்
உரிமைக்காய் குரல் கொடுத்து ஊனமானவன் தமிழன்
பத்தோடு ஒன்றாய் இவன் பாதியிலே சாவதற்கு
கொந்தளிக்கும் கடல் நடுவே
ஆர்ப்பரிக்கும் அலை நடுவே
தமிழன் வாழ்வு சூனியமாய் சுதந்திரமற்றதாய்
யாப்பின்றிப் போனாலும் போகட்டும் - ஆனால்

நம்நாடு மொழி மானம் உணர்வெல்லாம்
காப்பின்றிப் போதல் கூடாது
கல்வி கற்க கலை வளர்க்க காப்பில்லை
உயிர் வாழ உரிமை கேட்க காப்பில்லை.
ஓர் இனம் ஓர் மதம் ஓர் மொழியென
ஒற்றுமையாய் வாழ எண்ணியது நடந்ததா?
தத்துவங்கள் எல்லாமே சரி - ஆனால்
நடைமுறைதான் ஒத்துவரவில்லை.

துகிலுரியப்பட்டது பாஞ்சாலி மட்டுமல்ல
நாங்களும்தான்
துச்சாதனர்களால் உணர்வுகளும் உரியப்பட்டோம்.
இங்கு பாஞ்சாலி சபதம் படைக்கப் பாரதிகளாய்
அலைகளின நடுவே ஆர்ப்பரித்து நிற்கின்றோம்.

# கறுப்பு விழால்கள்

எஸ். கிறிஸ்டோபர் லியோ

இன்னும் எத்தனை இடைவெளிகள்
இந்த நூற்றாண்டுக்கும் இளைஞனுக்கும்
கல்விக்கும் தேசத்துக்குமிடையில்
பாலமிடப்படாமல்..... எத்தனை இடைவெளிகள்

புலமைகளெல்லாம்.....
புள்ளியிடப்பட்ட படிவங்களாக!
பட்டங்களெல்லாம் - வெறும்
பத்திரங்களாக ஏந்தி
தேசத்தைச் செதுக்கப் புறப்படுகையில்
வறுமை!
வாழ்க்கையோடு கைகுலுக்கும்!
இரவல் கல்விக் கொள்கைகளால்
இளைஞனின் எழுச்சியும்
தேசத்தின் எதிர்காலமும்
இரவுகளாகவே விடியும்!

இட்ட சுவடுகளிலெல்லாம்.....
பொருளாதாரத்தை
சுடராக்குகின்ற
சூட்சுமம் அறிந்தவனின்
மூளையை
தேசத்துக்கு விறகாக்கும்
தொழில் படைக்க வீரியமில்லாமல்
நிலாவிலே
நீல்ஆம்ஸ்ரோங் உலவியதையே
சொல்லிக் கொண்டிருந்தால்
நிலவிலா?
எங்கள் இளைஞனுக்கு
தொழில் கிடைக்கும்!

எங்கள் கனவுகளும் ஏக்கங்களும்
புத்தகப் பைகளிலே
இன்னும் சுமையாக
எப்போது?
எங்கள் நேசக்கரங்களும் - இந்த
தேசக்கரங்களும் கைகுலுக்கி
பொருளாதாரப் பூப்புக்கும்!

# சமாதானப் பறவை

எஸ்.சி.எம். செட்டியார்

வெண்புறாவே!
ஏன் சமாதானப் பறவையாய்
இழுக்கை உனக்குமல்லவா
இலங்கையர் ஏற்படுத்துகின்றனர்.
இலங்கையில் என் பெயரை
இழுக்க வேண்டாம் என்று கூறிவிடு.

பாத்தினிய களைக்கே
சட்டம் கொண்டு வருகின்றார்.
பேரினவாத களைக்கு
சட்டமில்லையா என்று
கேட்டுவிடு.

பேரினவாத ஒடுக்குமுறையை
பட்டியலிட்டு கூறிவிடு
பெயர்போன அரசியல்வாதியின்
பித்தலாட்டத்தையும் கூடவே
சுட்டிக் காட்டிவிடு.

ஸ்ரீ குழப்பம் ஐம்பத்தெட்டையும்
கறுப்பு ஜூலை எண்பத்துமூன்றையும்
கருணையற்ற பேரினவாதிக்கு
கடுப்புடன் எடுத்துக் கூறிவிடு.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை
புரியாத விஷமிகளுக்கும்
புரிந்தும் நடிக்கின்ற
புல்லுருவிகளுக்கும்
புத்தரின் போதனையை
போதி மரத்தடியில் கட்டி
பொதித்துவிடு
மேலும்........

வெஞ்சமரின் கொடுமையால்
அரைவாசிப் பேர்
அகதிகள் பட்டியலிலும்
பால்வடியும் மழலையும்
பள்ளி செல்லும் மாணவனும்
அநாதைப் பட்டியலிலும்
உடலங்கம் இழந்தோர்
ஊனமுற்றோர் பட்டியலிலும்
அப்பாவி இளைஞன்
தப்பாது சிறைப் பட்டியலிலும்
பட்டியல்படுத்தப்படுகின்றனர்
என்பதை,
ஊசி மூக்கால் கொத்தி கொத்தி
உணர்வு பெறக் கூறிவிடு.

நம் நாடு என்று கூறி
நாட்டாண்மை செய்யும்
வேஷதாரிக்கு
நாட்டின் பொருளாதாரத்தை
நயத்துடன் கூறு
நட்டப்படுவது
கட்(ஷ்)டப்படுவது ஓரினமன்று
இலங்கையன் என்பதையும்
இடித்துக் கூறிவிடு.

செக்கு மாடானால்
செய்யவழியில்லை.
மதிகெட்ட மனிதனுக்கு
விதி என்று கூறி - உன்
எச்சத்தை உச்சத்தில் விட்டு
எட்ட சென்றுவிடு.

# நம்மவர்களுக்காய்... நாம்

சி. பூபாலசிங்கம்

ஓ...... தோழனே.....!
நம்மைப்பற்றி நாம் கொஞ்சம்
பேசுவோம்.

குட்ட குட்ட குனிந்தவனும் முட்டாள்
குனிய..... குனிய
குட்டியவனும் முட்டாள் - இங்கு
கொடிக்கம்பங்களில்....
கயிறும் கொடியுமாய்
ஏறி இறங்கும் எங்கள்
அரசியல் பயணம்.

புத்திசாலிகள்
பிழைக்கிறார்கள் - அரசியல்
புத்திசாலிகள்.....
புழைக்கிறார்கள்

நீ.... ஏன்? மௌனமானாய்

அன்றிலிருந்து..... இன்றுவரை
நசுங்கி.... நசுங்கி
நாராய் போயுள்ள..எங்களை
எத்தனைப்பேர் - இன்னும்
நசுக்குகின்றார்கள்

வாழ்க்கை போராட்டம்தான்
உண்மை
சுரண்டியோடு.. இன்னும் நாம்
மண்ணோடு போராடுகின்றோமே-இது
என்ன
அடிமையின் குறியீடா.

எங்கள் குருதி குடித்து
குறட்டை விடும் அட்டைகள்-இன்று
எங்கள் பாதங்களில் மட்டுமல்ல
தலையிலும் 'குடி' கொண்டுவிட்டன.
வா தோழனே என்ன?
வாய்பொத்தி நிற்கிறாய்.

போராட்டங்கள்...
அரசியல் கோசங்கள்
எழுச்சிப் பேரணிகள் - இப்படி
எத்தனை எத்தனை
நாட்டிலும்... நாளாந்த வீட்டிலும்

ஆனால்,
தோட்டத்து வாழ்க்கை
மண் குடிசை
மயான காடு
வாழ்க்கை ஓலம்
வாலிப குமுறல்
போராட்டங்களில் போட்டியிட்டு
வெற்றி பெறாத விஞ்ஞாபனங்கள்

'ஒவ்வொரு மயான காடும்
தேயிலைக் காட்டில்தான் இருக்கிறது.
ஒவ்வொரு தேயிலைக் காடும்
மயான காட்டிலிருக்கின்றது'

வா தோழனே!
நம்மவர்களுக்காய.....
நாம் பேசுவோம்.

# நிஜங்கள்

செ. செல்வகுமார்

இது ஒரு அதிசய தீவு - இங்கு
கவலைகள் கலைந்து
மகிழ்ச்சியில் மக்கள்
நரைமுடியோடு
நலிந்த கரைபடிந்த
நகங்கள் விரல்களோடும்
இறுகிய முகமும்
அகன்ற தோள்களும்
காப்புக் கட்டிய கைகளோடும்
கண்ணம்மாவும் செல்லமுத்துவுமாய்
கால் மேல் காலிட்டு
கௌரவமாய் வாழ்கிறார்கள்.

உழைப்பு - ஏற்ற
வகையில் ஊதியம்
வயிறாற உணவு
வம்சத்திற்கான சேமிப்பு
சிறு சொத்து
வளமான வாழ்க்கை.

கணனி, இணையம்,
களிப்புடன் சிறுவர்கள்
ஆழ்ந்த சிந்தனை
வகையான வாசிப்பு
வருங்கால சமூகம்
வளமான ஆக்கங்கள்
வழிசமைக்கும் வாலிபர்கள்
பண்பட்ட அரசியல்
பக்கமிலார்
பாதகராய்க் குரோதராய் - வீண்
பொழுதைக் கழிக்கும்
பாவியுமில்லார்.

மகிழ்வோடு மங்கையர்
தனியான பயணம்
காடையரா...... யார் அவர்?
வன் புணர்ச்சியா...... என்ன அது?
அடகுக் கடைகள்
அடமான நகைகள்
மங்கையர் மார்பில்
மங்கள நாட்கள்.

தோட்டத்து லயன்கள்
எட்டடி எப்பவும் இருள்
எப்போதோ - பூசி மெழுகிய
அடுப்படி ஓரம் வெண்மை
ஓட்டை ஓட்டடை
ஒழுகும் கூரை - ஒப்புக்காய்
பெட்டிகள் - உடைந்ததொரு
கட்டில்
அம்மா, அப்பா, அக்கா
அண்ணன் குடும்பம் - அதற்கெலாம்
மாறானதொரு வாழ்க்கை.

அமைச்சர், அவரமைச்சர்
தொழிலாளி
தோள்களிலே கைகள்
தோழராம், உறவாம்!

உயர்ந்தவன் தாழ்ந்தவன்
படித்தவன் பாமரன்
சாதியான சமயத்தான்
வாழ்வினிலே - சமத்துவம்.

ஒழுகாத வீட்டில் - ஒழுகிய
நீர்த்துளிகள்
சில்லெனவே என் சிரம்
தீண்ட - தாடையிலே
ஊன்றி நின்ற கையதுவும்
நழுவியதால் - கன்னத்தில்
நகக்கீறல்.

கலைந்தது - என் கறுப்பு
வெள்ளை நிறக் கனவு
கனவே நீ நனவாக
கனகாலம் எடுக்குமோ?

# கற்பகத் தருக்கள்

இரா. தேவிகா

மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்.
என்ற
முண்டாசுக்கவியின்
முழக்கம்,
எங்கோ - ஒரு மூலையில்
நொண்டி அடிக்கின்றது.

மானங் காக்க
போர் புரியும்
மங்கையர்க்கு
பொன்னாடை, பொற்கிழியோ.....?
அதையும் மீறி
அபிஷேகம் செய்கிறார்கள்
இரத்தத்தால்.....

பெண் மகவு பலருக்கு
பிசிரடிக்கும்
ஆண்மகவு வேண்டுமென
ஆலயங்களில் அர்ச்சனைகள்
சிசுவைக் கூட,
பெண் என்றால்
ஆராய்ந்தழிக்கும் - பேர் போன
ஆய்வாளர்கள்.

பிரபஞ்ச அழகிகளாம்.....!
பெண்ணுக்கென்ன பெருமை?
விளம்பர உத்திகளில்
விலைபோகும்
பெண்ணழகு
காம வேட்கைக்கு
கழி முகங்களாகும்
கன்னியர்.

கணவருடன் செல்லும்
மனைவியரையும்
துகிலுரியும்
நவீன - துச்சாதனர்கள்
மனிதம் - புனிதம் பெறுவது
பெண்ணால்
பெண் - புனிதம் கெடுவது
யாரால்?

காக்க வேண்டியோர்
காடையராய் - மாறிய பின்
ஊளையிட்டு ஆர்ப்பரிக்கும்
உள்நாட்டு வெறியர்கள்
உதிரம் தனைக் குடிக்கும்
எதிர்பார்த்திருக்கும்
இராட்சத அட்டைகள்
இவர்களுக்கு
கன்னியரே
கற்பகத் தருக்கள்.

# ஓ மனசாட்சியே.....

வெ. பிரியதர்ஷினி

எம் சுவாசக் காற்றில்
உன் உயிரின் அழுகுரல்
அமிழ்ந்திருக்கிறது.

எமது உணர்வுகளின்
உச்சக் கட்ட உண்மையாய்
உனது உதயம்
உள்ளடங்கி நிற்கும்

இக்கட்டுகளில் நம்பிக்கைகள்
இடம் மாறும் - நாமோ
உன் உருவகப் படுத்தலால்
சிதைந்து போகிறோம்
காரணம்
அந்நியரின் அலட்சியங்கள்
காவலரின் காவாலித் தனங்கள்

பணக்காரப் பார்வைகள்
உன்னைப் பரிகரிக்கும்
பண்பாடு உன்னை
பழைமைக் காட்டி
பசிக்க விடும்.
உன் புசிப்பின் தீவிரம்
புரியாததாலோ?

நீதியின் ஆட்சியில்
நிறைய ஓட்டைகள்
உன் இருத்தல் காண்கையில்
சல்லடைத் துண்டுகள்
கொண்டு சரி செய்யப்படும்.

அக்கிரமங்களின்
அத்திவாரத்தில்
அஸ்தமித்துக் கிடக்கிறாய்.
நீதியின் நிசப்தத்தில்
உன் சிரிப்பொலி
கலீரிடும்.



# வீழ்வோமென நினைத்தாயோ?

திருமதி. சி. சாரதாம்பாள்

ஒட்டிய வயிற்றுக்கான
ரொட்டித் துண்டும்
ரவிக்கைக் கிழிவிற்கென
ஒட்டுத் துண்டும் - கூரை
ஓட்டை அடைப்பதற்காய்
ஒட்டடையும்
இன்னும் தேடுவதான அவலம்
ஏனிங்கே என ஏங்கி - உன்
திருவோட்டிற்குள்
திரும்பத் திரும்ப
வீழ்வோமென நினைத்தாயோ?

பள்ளி சிறாருக்கு
கறுப்புக் கண்ணாடியையும்
கலர்த் துணியையும்
காட்டி
பங்களாக்களுக்கனுப்பி
உயிர் வதைத்து - எங்கள்
தாய் தமக்கையரை
அக்கறையுடனே
அக்கரைக்கு அனுப்பி வைக்கும்
தரகுக்காரனையும்

இத்தனை
ஆண்டுகளின் பின்னும்
சாமி பேர் சொல்லி
சாகசம் காட்டி
நிற்கும்
பூசாரிக் கூட்டத்தினரையும்

என்னையும்
அவனையும்
தலைமுறைத் தலைமுறையாய்
இணைய விடாமலேயே
பிரித்துப் பார்த்த
சாதி வெறியனையும்

எங்கள்
சுயத்தை உறிஞ்சி
எம்முள்ளே முளைத்து
இப்போ
எம்மையும் - மீறி
தலைகாட்டும்
குருவிச்சைக் கூட்டத்தையும்,

ஏன்......?
பார்த்தினியச் செடியான
உன்னையும்,
இனங்கண்டு
தீக்கங்குகளை
நிகர்த்த - எம்
முஷ்டிகளைப் பலப்படுத்தி
பூண்டோடொழித்துவிட்டு

'பீனிக்ஸ்'
பறவைகளாய்
உயிர் பெறுவோம்,
உயரப் பறப்போமேயல்லாமல்.....
ஒட்டிய வயிற்றுக்கான
ரொட்டித் துண்டுகளுக்காய்
மட்டுமா?

# சிறகுகளை விரித்துப் பார்........

த. ஜெயகாந்தன்

ஓ....
இளைஞனே
கற்பனை என்கின்ற
கானல் நீரில்
நீந்திக் கிடப்பதும்
கனவுகள் என்கின்ற
கார்மேகத்தை லயிப்பதும்
உன்
வாழ்க்கையாகிவிட்டது.

வேண்டாமடா
அதன்
பின்னால்
வேதனைகளே மிஞ்சும்.

சிந்தனைச்
சிறகுகளை
சிறிதாகவேனும்
விரித்துப் பார்.


கந்தல்களாகிய
எம்மவர்படுகின்ற
கவலைகள் புரியும்.

நொந்து நொந்து
வெந்து கிடக்கின்ற
நம் தேசத்தின்
நிலைமைகள் புரியும்.

சொந்தங்களைப் பிரிந்து
எம்மவர் - உலகில்
அந்தங்களிலெல்லாம்
அகதிகளாய்ப் படுகின்ற
அவலங்கள் புரியும்.

விடிவு
எங்கே என்று
உன் விழிகள்
தேடும்.

சில வேளைகளில்
மிக அருகே
வெளிச்சங்களும் வரும்
வழிகளும் தெரியும்.



# கல்லூரிக் காதல்

இ. மகேந்திரன்

வருடங்கள் இரண்டு
விழுங்கிவிட்டு
வாசிக்கப்பட்டதொரு நூல்
இது குறிப்பெழுதும் நேரம்.

துரை பங்களாவிற்கு செல்லும்
தொழிலாளிகளாய் வந்தோம்.
எளிமையோடு
எங்கள் எதிர்காலத்தைப் போல்
உறுதியோடு
எம்மவர் உழைப்பை
முரசறைந்து நின்றது
கலா(தொழிற்)சாலை.

அதற்கொரு
முண்டாசும்
முறுக்கு மீசையும் வைக்க
ஆவல் கொண்டோம்.

போக்குக்காட்டல்களும்
போலித்தனங்களும்
எங்கள் இதயங்களை
வெறுமையால் நிரப்பின.

அர்த்தமற்று
நகர்ந்த நாட்கள்
சில்லறை செயல்களை
தூண்டுவது இயற்கை.

பழிவாங்கும் பயமுறுத்தல்களும்
சினமும் சீற்றமும்
ஆளுமைகளாகின.

முன்பின் அறியாது
கட்டளைகள் நிறைவேற்றும்
மேலிடத்தின் கருவிகள்.

இதனையும் மேவிய
மானுட நேயங்கள்
எம்மிலோர் பிடிப்பை
தோற்றிய நாட்கள்
அர்த்தப்பட்டன.

பதாதைகள் ஏந்தி
பயணித்த நாட்களும்
நூலாக்கும் வேளைகளில்
பசிமறந்த இரவுகளும்
ஆய்வரங்கு ஆழத்தில்
மூழ்கிய நேரங்களும்
வசீகரமான நினைவுகள்.

நினைவுகள்
அழியுமா காதலில்.
காதலித்திருக்கிறேன் நானும்
ஒரு மைனா கூட்டத்தை.

இப்போது
வலுவின் திரட்சிச் சூழ்
எங்கள் இறகுகள்
எதிர்வரும் பெரும் புயல்
கிழித்தேகும்.

பின்வாங்கலும் முன்னேறுதலும்
விதியாக்கப்படலாம்.
பறப்பதை விடவும்
எமக்கொரு வாழ்வில்லை.

# தொலைந்த சயனம்

து. நவரட்ணஜோதி


நான் இழப்பதற்கு எதுவுமில்லை
என்னைத்தவிர
நான் நானாக இல்லை.
உப்புக் காற்று ஊதிய வேளை
முற்றத்துப் பனைகள் ஓலமிடும்
'அ' எழுதிய அவனோ
முற்றத்தை அழித்துக் கொண்டிருந்தாள்.
ஆச்சி பேசுவாள்.
அம்மா துரத்துவாள்.
சின்னண்ணா ஓடிப் பட்டம் ஏற்றுவான்.
வால் பிடித்துவிட நான் மறுப்பேன்.

மாதா கோவிலில் மணி கேட்கும்.
ஊர் கூடும்
தந்தை திருப்பலி கொடுப்பார்.
யார் யாரோவெல்லாம்
மன்னிப்புக் கேட்பார்கள்.
துள்ளித் திரிந்த காலம்

எங்களூரில் அவர்கள் புகுந்தனர்.
பிதாமகருக்கு முள்முடி சூட்டி
மீண்டும் சிலுவையில் அடித்தனர்.
உப்புக் காற்றுக்கும் உருக்குவேலி
முற்றத்துப் பனைகள் முறிக்கப்பட்டது.
ஆச்சி ஏக்கத்தில் பேச மறுத்தாள்.
அறுந்த பட்டமாக அண்ணா...
தொலைந்து போனான்.
அடுத்த காலங்களில்
அவளும் போனாள்.

வன்னி!
மரநிழலில் நானிருக்க
மடியினிலே தாயுறங்க
மண் எனக்குத் தாலாட்ட
மழை எனக்கு நீராட்டி
உலகெனக்குச் சொந்தமாகி
உறங்குகின்ற வேளை

"செம்மணி"
எனும் சேதி வந்தது.
தேடிய அவளின்
சட்டை வந்தது.
அம்மா.....
உறங்கிய நிலையில் எழவும் இல்லை.
உறவுகள் எவரும் கூடவும் இல்லை.
எனது சயனம் தொலைந்து போனது
எங்கோ...... எங்கோ......



# நிஜங்கள்

வீ. சசிகுமார்

விதைகள் விதைக்க மண்ணில்
விளைந்தது பிணங்கள்
பண முடைகளுக்காய்
பிண வாடைகள் .........

காதலும் போரும் பேச
சங்க காலமல்ல.
அறம் மலர்ந்த
அற நெறிக் காலமல்ல.

மனிதனை மனிதனாய்
மதித்து வாழாத
மனித நேயமற்ற
இக் காலம்.

கருத்தினில் காத்திரமும்
கருணையும் - ஆனால்
உள்ளத்துள் உபத்திரவம்.....

பச்சைக் குழந்தைக்கும்
புட்டிப் பாலில்
ஊட்டப்படுகிறது
இன வாதம் ........

காலமோ கலிகாலம்
கலங்குவதே நம் பிறப்பின்
இலாபம் .........




# ஏனிந்த அவலம் பாரினிலே..........

திருமதி. சு. பிரேமராணி

நடந்து வந்த பாதையிலே
நடந்து முடிந்த சம்பவங்களை
அசைபோட்டுப் பார்க்கையில்
ஆசையின் வேகத்தால்
மோசமாக நடந்தவைகள்
விழிமுன்னே தோன்றும் போது
விடியலுக்காய் மனம் ஏங்குகிறது!

வார்த்தைகளை அடகு வைத்து
வயிற்றினை நிரப்புவதற்கு
வாங்கிய சில்லறையோ
வட்டியோடு குட்டிப் போட
வயிற்றுப் பசியோ
வறுமையால் தடம் மாறுகிறது.

பட்டம் பெற்ற இளைஞர்களோ
படியேறி வேலைத் தேடி
பட்டினிப் போராட்டத்திற்கு
பகைக்கொடி தூக்க
முனைகையில்
வேலைக் கிடைக்காத மன
உழைச்சலும்
எதிர்கால எதிர்பார்ப்பும்
தூசு தான் என்றவர்களுக்கு
தூக்க முடியாப் பழுவாகி
தலைகுனிய வைக்கிறது.



# என்று தணியும்?

செல்வி ஏ. புனிதகலா

மலையோடு மலையாக
மலைத்துப் போய்
நிற்பது ஏன்
மணிச்சுடரே!

இரும்பு இதயத்தில்
என் மனக்குமுறல் கொண்டு
எத்தனை முறைகள்
அடித்திருப்பேன்....
எழுந்தது நாதம்?
அது....
உன் குரலா? என் குரலா?
ஏதோ ஒரு அழுகுரல்!
அல்லவே..... அல்ல...
பல குரல்களின் சங்கமம்
உயிரை அறுக்கும் ஓலம்

அவலத்தின் ஒப்பாரிகளால்
கரைந்தொழுகும்
பனிச் சூரியனல்ல நீ....
தீமையைச் சுட்டெரிக்கும்
தீப்பிளம்பு

இந்தத் தகிப்புகள். தவிப்புகள்
அஸ்தமனத்திற்காக அல்ல
புதியதொரு விடியலுக்குத்தான்

உதித்து உதித்து ஏன்
உறங்கிப் போகிறாய்?
அரசியல் பகடையாய்....

விழித்திருந்து உறங்குவது
உனக்கு மட்டுமே
சாத்தியம்.....

நம் மனவாகனத்தின்
முன் கண்ணாடிக்குத்தான்
துடைப்பான்!
பக்கக் கண்ணாடிகளில் ஏன்
பனித்திரை?....

துடைத்தழி

எவனோ ஒருவன்
மேல் தட்டில் வாழ,..
உன் உணவுத் தடடை
ஏன் கொடுத்தாய்
சுவரமைக்க?

**முதலாமிடம் - பெண்**

துயிலெழு.

உன்னை நமுத்துப் போக
நான் விடமாட்டேன்,

கால மேகங்களை என்
போனா முனையில் பொசுக்கி
உனக்குப் புது உதயம் தருவேன்.

இதயத் தசைகிழித்து
உதிரத் தேன் கலந்து
பெருமூச்சில் சுட்டெடுத்த
.........................

வழித்திரையாகி வழிமறைக்கும்
துளிநீர் உப்பிட்டு
இன்னும்...
எத்தனை நாளைக்கு
விருந்து வைப்பாய்?

இன்றாவது விடிய
உன்
கதிர்க்கரம் விரித்தெழு!

கண்ணீர் மழை போதும்
சும்மாவே
இந்தச் சாயம் கரிக்கிறது.

உழைப்பைத் தான்
பறிகொடுத்தாய்
உணர்வுகளை
ஏன் தொலைத்தாய்?

அட...
இன்னும் தான் மௌனம்.

பொய்மொழி மேகம்
உன்னை நன்கு புதைக்கிறது.
என்றுதான் ஒன்றிணைவாய்?

கொதித்துக் கொதித்துத்
தணல்
குமுறிய போதெல்லாம்
சமாதானம் என்ற
சமாளிப்பு வார்த்தைகளால்
அமிழ்ந்து போவது ஏன்?

அடக்கும் கையழிக்க
அலையும் உணர்வுக் கனல்
என்று தணியும்?

# தூங்காத இரவில் நீங்காத நினைவு .......

எஸ்.- விஜயபாரதி

கருமேக கூட்டங்கள்
கலைந்து ஒன்று கூடி
சிறகென்று விரித்திட்ட
சிறு வேளை தனிலே
வரவென்று எதிர்பார்த்த
வண்ண நிலவுடன்
வந்து உதிர்த்த வேளையதன்
வரவாம் அந்த இரவு.

அதிகாலைப் பொழுதென்று
அறைகூவி அழைத்திட்ட சேவல்,
அமைதி ஒலி பரவி,
ஆர்ப்பரித்த பறவைகள்,
துள்ளி வந்த உற்சாகத்தில்
துளிர் விட்டெழுந்த மனங்கள்,
ஒன்று கூடி தம்மின்
உயர்வு உழைப்புக்கு விரைய.......

பட்டாம் பூச்சிகளாய்
பாடசாலை சிட்டுகளும்,
கொங்காணி போட்டு நிதம் - கூடும்
கூடைக்காரிகளும்,
எட்டு மணிப் பிந்திவந்தால்
ஏச்சு தரும் கங்காணிகளும்,
பிள்ளை மடுவமதனில்
பேரம் பேசும் பிள்ளைகளும்,

சுரண்டிக் கம்புகளும்
சுடுதண்ணீர் போத்தல்களும் - நித்தம்
இவர் வாழ்வில்
நிழல்களாய் தொடருகையில்..

அல்லும் பகலுமாய் அரை உறக்கமில்லாது
துட்டு பணம் பெற்று தம்
துயர் துடைக்க வேண்டுமென்று
எட்டி நின்று கொழுந்தெடுத்து
இறக்கி வரும் சுமையில்
பெற்ற சுமை மறந்து
பெருமிதம் கொள்ளுகின்றார்.

பத்து மலைக் கொழுந்தெடுத்து
பத்து கான் குழிவெட்டி
தொங்கத் தொங்க ஓடுகிறார்
தோள் ஒடிந்து திரும்புகின்றார்
காம்பிரா லயமதனில் கால் நேரம் கழித்துவிட்டு
நாலு பணம் தேடி அந்நியர் காணிக்கு ஓடுகிறார்....

மங்கிய ஒலிதனில் மறுபடியும் திரும்புகின்றார்.
நாளை மலரும் நாளுக்காய்
விண்ணப்பப்படிவம் கொடுக்க
விடியலுக்கான வேளையை தோற்றுகிறது - இரவு
இன்றைய இரவு போல்
நீங்காத நினைவுகளாய்
என்றும் தொடருவது எம்நிலையா........?

ஏ மானுடமே
ஏக்கப் பெருமூச்சுகளாய்
எம்முடன் தொடரும் ஏழ்மை நிலை கண்டு
எவர் வருவார்......? துயர் துடைக்க.........

ஆ........ மறுபடியும்
அங்கே தெரிகிறது அந்திவானம்
வேண்டாம் விடியலின் மறுபுறமும்
எமக்கு வேதனை தருவதாயிருந்தால் - யாரும்
தூங்காத இரவாக மலர வேண்டும் - அன்றேல்
நீங்காத இன்ப நினைவாக மலர வேண்டும்
மலையகத்தான் மனம் குளிர வேண்டும்.

இரண்டாமிடம் - பெண்

# விதைக்கப்பட்டவராய்......

வே. தினகரன்

அடர்வனம் ஊடறுத்து,
உட்சென்று, முட்களிறங்கி,
வீங்கிய தசைகளை
விரித்த உள்ளங்கையிலுமிழ்ந்த
எச்சலைப் பூசிக்கொண்டு,
காடழித்தவர்கள் - நல்ல
கழனி சமைத்தவர்கள் - இந்த
கறுப்பு மாந்தர்கள்

வியர்வைச் சுரந்து சுரந்து
களைத்தச் சுரப்பிகளை
ஏந்தியுழைக்கும் கண்ணீரச் சுரபிகளே!
உமை ஏய்த்து, உரித்து,
கசங்கிப் பிழிந்து, சாறெடுத்தே - தம்
ஏடுகளை நனைத்து
கனமேகின சரித்திரங்கள்

குருவிகளின் உரிமைகளுக்குப்
பட்டினிப் பூனைகளை
பட்டாளத் தளபதியாக்கிக்
கூத்தாடி கொண்டாடித்
திளைத்தீர்கள்.

சிம்மாசன சொகுசுகள்
சொப்பனமூட்ட, சில்லறை நிலை
செல்லரித்துச் சரிய
பலகோடிகளில் ஆட்டங்களும்
லயக் கோடிகளில் வாட்டங்களும்
வாழ்வாங்கு வாழ்ந்தபடி

உணர் தோழா' - உன்
வம்ச வாழ்வுக்கென வரண்ட
கனவுகளை விடுத்து
சேர்த்த பொருள் வேறேது?

முதலாமிடம் - ஆண்

உனைச் சப்பிச் சப்பித் துப்பியே
பெருத்த எலிகளுக்கெதிரான - உன்
எழுகையின் அதிர்வு
பலமுறல் அவசர அவசியம்

மண்சுட்டால் மழைநீரும்
மேலெழுந்தெகிரும்
சூடுபடாத மயிர்க்கால்
ஏதுமுளதா உன்னிடம்?

நமக்குள் விதைத்து, விளைந்து
உழைப்போன் உரிமை கூவி
மதர்ப்புகளுக்கு மார்தந்து மரித்தோர்
முகவரி தேடி மேய்ப்பர்களின் முகத்திலறை!

மௌனங்கள் மாண்டதென
தியாக தைரியமேற்றெழுந்து
விழிகளில் நெருப்பேந்தி,
நெற்றி புடைக்க நெடு முழக்கமிடு!

ஊரையுண்போனுக்கு பூலானாய்,
நாட்டைத் தின்போனுக்குப் புலியாய்,
உலகைக் கொரிப்போனுக்கு தலிபானாய்,
நெஞ்சம் நிமிர்த்து!

எளியோனுக்காய் வலிமை பிணைத்து
'சஞ்சீவி' பெயர்த்த அனுமனாய்
நிமிர்! மோது! வெல்!
அன்றேல் மரி!

மரிப்புறினும் புதைப்புறாதுன்
திரேகம்...... விதைப்புறும்!
மீளவும் முளையுறும்
நிலம் துளைத்து நிமிர்ந்த விருட்சமாவாய்!
தோழா!

ஓர் அப்பாவிக் கூட்ட
விடுதலைக்கான மரிப்பென்பது
வீழ்ச்சியல்ல! எழுச்சி!

# வேஷங்கள்

ஆர். லிங்கேஸ்வரன்

காலத்திற்கு என்னில்
ஏன் இத்தனை சீற்றம்?
இறந்தகால உறவுகள்
எனக்குத் தந்த கேள்விகள்
நிகழ்காலத்தில் பூச்சிய
நிரம்பலானது.
எதிர்காலத்தில் சாபம்
வரம்பாயிற்றோ?

பால்குடி மறக்காத
பச்சிளம் வயதில்
பாசத்தின் பல்லவிகள்
எனக்கும்தான்
பாடப்பட்டன.

அன்னையின் மடியில்
ஆரிராரோ கேட்டு,
அக்காவின் மடியில்
ஆங்கிலச் சொல் கூறி
ஆனந்தம் கொண்டவன்
நான்.

என் சிந்தைகள்
சிதையும் போதெல்லாம்
தந்தையின் மடியில்
தலைவைத்துத் தூங்கி
தனிச்சுகம் கண்டவன்
நான்.

மணமுடித்த அண்ணன்
மணம் கொண்டவளோடு
மாமியார் வீட்டுக்கு
மாற்றலாகிச் சென்றுவிட
மகிழ்ச்சிப் பூக்கள்
வாடிப் போயின.

அக்காவும் ஓர்
அந்நிய வாலிபனோடு
அகன்று சென்றுவிட
அமைதிப் பூக்கள்
அழிந்து போயின.

கவனங்கள் நிறைந்து
சாந்தியின்றித் தவித்த
என் தந்தை
சத்தமே செய்யாமல்
சமாதி நோக்கிச்
சவாரி செய்துவிட
சந்தியில் விடப்பட்டோம்
நாங்கள்.

பூத்துக் குலுங்கும்
புன்னை மரமாய்
பூரித்து நின்ற
என் குடும்பம்
பொலிவிழந்து போன
மயான தேசமாய்
மாறிப் போனது.

நேயங்கள் எனக்குத்தந்த
காயங்கள்
நீங்காமல் என் நெஞ்சில்
கோடு கிழித்துக் கொண்டிருக்கிறது.

பாசங்கள் எனக்குத்தந்த
வேஷங்களால்
வாசமின்றி என்னுள்ளம்
கோஷமிட்டு தினம்
குமுறிக் கொண்டிருக்கின்றது.

பாசமென்ற பல்லவியை
தன்னுடலில்
பச்சைக் குத்திக் கொண்டு
பகல் வேஷம் போடுகின்ற
பச்சோந்திகளோடு
பல்லாங்குழி ஆடிய நான்!
வேஷக்குகையிலிருந்து
வெளியே வரமுடியாமல்
விம்மிக் கொண்டிருக்கின்றேன்.
விடிவு வருமா?
என்ற வினாக்குறிகளோடு.

**இரண்டாமிடம் - ஆண்**


# எழுக மானுடமே ........

ஏ.ஜி. டொமினிக்கா

உலகமே உன் கையில் வேண்டும்.
என்ற எண்ணம் வேண்டாம்.
வருக புது மானுடமே!
எழுக புது மானுடமே!
உலக ஏட்டிலே வாழ்க்கைப் பாடமே
எழுதி உலகிலே சேருவோம் வா......

மணம் தரும் மலர்ச் செடியில் முள்ளாக வறுமை
மலர்ந்திடக் காத்திருக்கும் உன் வாழ்விலே
குணம் தரும் வெற்றியில் பணம் உன் தடை
துணிந்திட மனம் இருக்கும் உன் வாழ்விலே
மடை திறந்தே பாயும் வெள்ளம் போல் வா
தடை மறந்தே நீயும் துணிவோடு வா........

பாரில் பொழிந்துருகும் பனி போலவே
வாழ்வில் வரும் இன்பம் நிலை கொள்ளுமா?
போரில் மடிந்துழலும் உயிர் போலவே
துன்பங்கள் வந்தேற தடை ஏதம்மா?
வெற்றியின் படிக்கல்லாய் துன்பத்தை ஏற்பாய்
வென்றிடும் மானுடமாய் விழித்தெழுவாய் நீயே .........



இயற்றிப் பாடல் முதலாமிடம் - பெண்.

# பெண்ணே உன் நிறமென்ன?

ஆர். பூங்கொடி

பெண்ணே உன் நிறமென்ன - நீ
பேசும் மொழி என்ன - உன்
அன்பின் விலை என்ன - அதை
அறியாதோர் நிலை என்ன
(பெண்ணே)
அடைத்த வீடு உன் உலகமில்லை - அதை
அரைந்து சாத்தவும் யாரும் இல்லை
திறந்து கிடக்குது இந்த பூமி - அதை
தெளிந்து தெரிய வா வா
அடிமை என்பது உன் பட்டமா - அதை
அணைத்துக் கொள்வது உன் திட்டமா?
விடியல் என்பது உன் மொழியடி - அதை
விளங்கிக் கொள்வது உன் வழியடி
மௌனம் என்பதை கலைத்துவிடு - உண்மை
மனதிற்கு நீ என்றும் மாலையிடு.
(பெண்ணே)
பெண்மை என்பது வெறும் போதையில்லை - அவள்
உண்மை என்பதைநீ உணர்த்து
மென்மை மட்டும் அவள் வேதமல்ல
வன்மையும் உண்டென நிலைநிறுத்து
வீசிடும் தென்றலில் மென்மையென்றால்
எரிந்திடும் வீசிடும் சுடர் நீதான்
பூக்களில் வீசிடும் வாசமென்றால் - அதில்
முட்களாய் உள்ளதும் உன் உருதான்
உண்மையை மட்டும் நீ போற்றிடு - வரும்
பொய்மையை வேரோடு நீ மாற்றிடு
(பெண்ணே)
காலத்தை மட்டும் நீ குறை சொல்லாதே - அதில்
கயவர்களின் திட்டத்ததை எதிர் கொள்ளாதே
நீதிக்கு மட்டும் நீ தலை வணங்கு
நியாயத்தின் வழி என்றும் நீ இறங்கு
நல்ல ஒரு பெண்ணாய் நீ வாழு
நலமுள்ள தாயாய் உயர்வு பெறு
கலைகள் பேணும் தமிழ்ப் பெண்ணாய்
காலம் உன்னைப் போற்றட்டும்
பெண்மையின் நிறம் என்ன என்போர்
உண்மைதான் உன் நிறம் எனத் தெரிவர்
(பெண்ணே)

**இயற்றிப் பாடல் இரண்டாமிடம் - பெண்.**

# அசையாத ஆணிவேர்

என். நாகேஸ்வரி

அசையாத ஆணிவேரடா - நீ
அசையாத ஆணிவேரடா
கடும் புயலை எதிர் கொள்ளும்
நாணலைப் போல II
கற்கொண்டு உடைத்த போதும்
அசைந்திடவில்லை
அசையாத ஆணிவேரடா

பணம் என்ற பேய்கூட பயப்படுமடா
பலவீனம் உன்னைக் கண்டு ஓடி விடுமடா
உயர்வான மாடங்களும் மாளிகைகளும்
உன் திடத்தை ஒரு நாளும்
அசைக்கவில்லையடா
அசையாத ஆணிவேரடா

பட்டாடை அணிகலன்கள்
உன்னிடம் இல்லை
பகட்டான வாழ்க்கை ஏதும்
உன்னிடம் இல்லை
உண்மையும் நேர்மையும்
ஒருவனில் உண்டு - அது
உன்னிடம்தான், உன்னிடம்தான்
வேறு யாரிடம் உண்டு
அசையாத ஆணிவேரடா

வறுமையிலும் உதவி செய்யும்
வாஞ்சையும் உண்டு!
வரும் துன்பம் போக்குகின்ற
வலிமையும் உண்டு
எந்த நிலை வந்தபோதும் கலங்குவதில்லை.
இந்த மனம் இந்தக் குணம் எவரிடம் உண்டு.

அசையாத ஆணிவேரடா - நீ
அசையாத ஆணிவேரடா

நேர்மை என்றும் கருணை என்றும்
உன்னைக் கண்டேன்
நீதி என்ற சொல்லிலும் உன்னைக்
கண்டேன்.
அழியாத செல்வமடா உலகில் நீதான்
அகிலமெல்லாம் உன் வடிவம் ஆணிவேரடா.

**இயற்றிப் பாடல் மூன்றாமிடம் - பெண்.**

# கனவு மெய்ப்பட வேண்டும்.

எம். இரவி

உரிமைகளை இழந்து உயிரைச் சுமந்து கொண்டு
சாலை வழி நடக்கின்றோம்.
தேகபலம் கொடுக்க பாதபலம் கொடுக்க
அமைதிதனை அழைக்கிறோம்.

பயணம் பயணம் அகதிப் பயணம்
தமிழரின் உறவுகள் பிரிந்ததினம்
அடிமேல் அடியாய் நடந்தோம் - எமது
கனவுகள் உணர்வுகள் எதுவுமின்றி
மறு உயிர் பெறுமா எம்வாழ்வு?

(பயணம்)

கட்டும் கட்டி தோளில் கட்டி
அகதிப் பயணம்
காட்டுவழி நடந்து வந்த
கண்ணீர்ப் பயணம்
தொடங்கிய யாத்திரை
தொடர்கதை தானா?

தாயின் மடியோடு பிறந்தோம்
கவலை இல்லாமலே
மீண்டும் அதை நோக்கி நடந்தோம்
ஏதும் இல்லாமலே
கணக்கு வழக்கு தீர்க்கவோ
கனத்த இதயம் எடுக்கவோ
ஷெல்கள் முன்னேறுதே.

உரிமைகளை இழந்து உயிரைச் சுமந்து கொண்டு
சாலை வழி நடக்கின்றோம்
தேகபலம் கொடுக்க பாதபலம் கொடுக்க
அமைதிதனை அழைக்கிறோம்.

(பயணம்)

உடல் வலி மன வலி தினம்
தினம் சுமந்தோம்
உண்மை வழி உயிர் வழி
உறவோடு இழந்தோம்
தினம் தினம் உணவின்றி
நிழல்களில் வாழ்ந்தோம்
நதியின் பயணங்களாலே உயிரின்
பசி தீருமே எமது பயணங்கள் வழியே
அவலக் குரல் சேருதே.
உதவிக் கரங்களே வாருங்கள்
தமிழர் நிலையினைப் பாருங்கள்
எம் கனவுகளைக் காப்பாற்றுங்கள்

உரிமைகளை இழந்து உயிரைச் சுமந்து கொண்டு
சாலை வழி நடக்கின்றோம்
தேகபலம் கொடுக்க பாதபலம் கொடுக்க
அமைதிதனை அழைக்கிறோம்.

(பயணம்)

**இயற்றிப் பாடல் முதலாமிடம் - ஆண்**

# கனவு மெய்ப்பட வேண்டும்.

க. பூபாலசிங்கம்

**தொகையறா**

மனிதா.. நாம் வாழ்வது......
நாடகமேடை ...... அதில்
நடிப்பது.... எவ்வளவு வேளை....
ஆ.......... ஆ......... ஆ.........

**பல்லவி**

உருண்டை பூமியில் நாம்
உருண்டோடும் வண்டி
தவறி வீழ்ந்து விட்டால்
அன்றாடம் நொண்டி II
பேசும் வார்த்தையிலே
தெளிவிருக்க வேண்டும்
போடும் வேடத்திலே
உண்மை நிலை வேண்டும்II

**சரணம்**

சதியால் தாணிழந்த
நிலைமாற வேண்டும்
தந்தையை இழந்த நிலை
அதுவும் மாற வேண்டும் II
சொந்தம் பந்தமெல்லாம்
சேர்ந்து வாழ வேண்டும்
சுகமாய் உறவாடும்
இனிய நாளும் வேண்டும் II
(உருண்டை)

தமிழன் என்று தூற்றும்
எண்ணம் மாற வேண்டும்
எல்லோரும் இலங்கைத் தாயின்
பிள்ளையாக வேண்டும் II
தமிழில் அகதி என்ற சொல்லை
நீக்க வேண்டும் II
ஒற்றுமை என்ற சொல்
நிலைத்து நிற்க வேண்டும் II
(உருண்டை)

இயற்றிப் பாடல் இரண்டாமிடம் - ஆண்

# புதிய மானுடமே வருக

எம். தாஸ் பெர்னாண்டோ

**பல்லவி**

புதிய பூமியே உன்னில் புதிய நாட்களாய்
பூத்துக் குலுங்கிடும் என் புதிய தேசமே//
கறுப்பு நாட்களை நீ களைந்ததனாலே//
புத்தம் புதிய மானுடம் இங்கே ஊர்வலங்களே!

**அனுபல்லவி**

புத்தம் புதிய மானுடமே மண்ணில் வந்திடு.
மனிதம் மண்ணில் வாழ்ந்திடவே
விதையாய் மடிந்திடு.

**சரணம்**

மனிதம் உன்னில் மடிந்ததால்
போர்கள் மூண்டது - அன்று
புனிதம் உன்னில் உறங்கியதால்
உலகம் இருண்டது//
இந்நிலைகள் கலைந்து நீயும்
களித்திடவே.......
உண்மை நீதி உடுத்திக் கொண்ட மனிதனாக வா// நீ மனிதனாக வா.

பொதுமை உன்னில் புகுந்ததால் இந்த
நாடு சிறியது - இன்று
அதன் அதிர்வுகளில் அமைதி மௌனம் கலைந்து தளிக்குது//
போர் முனைகள் நந்தவனங்களாக பூக்குது// - அங்கு
உரிமை பெற்ற மனித கூட்டம்
நலமாய் கூடுது// இன்று நல்மாய் கூடுது.

வேதனைகள் மட்டும் உனக்கு சொந்தமில்லையே
சோதனைகள் மட்டும் உன்னை தொடர்வதில்லை//
புது நம்பிக்கைகள் நம்மை தினம் வாழ வைத்திடும்//
சாதனை நோக்கி நாமும் வேள்விகள் செய்குவோம்
நல்ல நாட்கள் தொலைவில் என்றோம்.
அருகில் வந்த ஆனந்தத்தில்
மூழ்கிடுவோம் மானுடமே வா// புதிய மானுடமே வா

இயற்றிப் பாடல் மூன்றாமிடம் - ஆண்

# ஓவியப் போட்டிக்கான தலைப்புக் கவிதைகள்

''உயிரொரு பெருநிதி - காதல்
உயர்வுடையதனினும் ஆம்
சுயம்பெரு விடுதலை - காண
துறப்ப னவற்றின் நான்''

சிறைக்கம்பிகளில்
முகத்தைப் புதைத்துக் கொண்டு
அம்மா அழுதாள்

''செல்ல மகன்
கனவுகளில் வரும்
பேய் பிசாசுகளை விரட்ட
விளக்கமாத்தையும் செருப்பையும்
நீதானே அம்மா
போட்டு வைப்பாய்த் தலைமாட்டில்!


அரச மரத்தின் நிழல்கள்
மெலிந்து
நீண்டு வளர்ந்தது
விளையாட்டில் மூழ்கிய சிறுவர்களும்
பார்வையை மட்டும் அங்கே விட்டு
இடையிடை ரசிக்கும்
முதியவர் சிலரும் அங்கே
தண்ணி மாறும் மண்வெட்டிகள்
சிறு புல்கட்டுகள் அருகில்
உழைப்பின் களைப்பிலும்
பரிமாறப்படுவதெல்லாம்
துயரங்கள்!

தூர்ந்து போன வசந்தமும்
நாளைய சந்ததியின் வளமும்
பங்கெடுத்துக் கொள்ளும்
மானிடர்களில் நாமுமொருவராய்
தாயகம் ஒன்றின் வரலாறு
தேடியழித்த தீங்கினை
இன்னும் பல நாட்களும்
நெஞ்சினிற் கொள்ளும் வரை
போராடிக் கொண்டிரப்போம்
புதிய எழுச்சியை நோக்கியோ
திடமான கொள்கைகளில்
ஆயிரமாயிரம் கரங்கள்
ஒன்றிணைந்து அணிவகுக்கும்.



ஆர் விஜயா
முதலாமிடம்


எஸ். பிரபா
இரண்டாமிடம்



கே. ஜெயசித்ரா
மூன்றாமிடம்




ப. ராஜபதி
இரண்டாமிடம்



து. நவரட்ணஜோதி
முதலாமிடம்



எஸ். நாகேந்திரகுமார்
மூன்றாமிடம்




எம்.ஆர். பிலீசியன் ரோய்

ஆர். ஆன்மேரி வலன்டினா குரூஸ்





## இரவினுள் ஒரு பகல்

தடம்
மாறிய தண்டவாளத்தில்!
தடம் புரண்ட.........
ரயில் போல்!
தட்டுத்தடுமாறி - இந்த
தள்ளாடும் வயதிலே.......
தாயோ! பாட்டியம்மா!
தாங்கள் செல்லும்
தாயகம் தான் எங்கே?

நா. முருகநாதன்




து. நவரட்ணஜோதி


டி. தெய்வீகராஜபதி

# படைப்பாளிகளின் முகவரிகள்

| | | | |
|---|---|---|---|
| 01. | வே. தினகரன் | - | கெலிவத்தை, பத்தனை. |
| 02. | எ. புனிதகலா | - | இல. 11, ஞானாநந்த கம, வட்டவளை. |
| 03. | க. காஞ்சனா | - | கல்பனா தளபாட நிலையம், ஊட்டன் பஜார், கொட்டகலை. |
| 04. | எஸ். மர்சூக் | - | அல்மினாபுரம், தில்லையடி, புத்தளம். |
| 05. | இ. மகேந்திரன் | - | இல.113, பிரதான வீதி, நோர்வூட். |
| 06. | ந.ராஜினிப்பிரியா | - | ராகலை குரூப், ராகலை. |
| 07. | க. விநாயகமூர்த்தி | - | வெதமுல்ல தோட்டம், றம்பொடை. |
| 08. | ச. மாலினி | - | இல. 36, உருத்திரபுரம், கிளிநொச்சி. |
| 09. | கிறிஸ்டோபர் லியோ | - | என்பீல்ட், டிக்கோயா. |
| 10. | எஸ்.சி.எம். செட்டியார் | - | 11/2, ரொசிட்டா பஜார், கொட்டகலை. |
| 11. | வீ. சசிகுமார் | - | சென்மார்கிரட் தோட்டம், உடபுஸல்லாவ. |
| 12. | சி. பூபாலசிங்கம் | - | பிரவுன்ஸ்விக் டிவிசன், மஸ்கெலியா. |
| 13. | ஆர். லிங்கேஸ்வரன் | - | கந்தசேனை நமுனுகுல. |
| 14. | ஏ.ஜி. டொமினிக்கா | - | புனித அந்தோனியார் தேவாலயம், றக்குவானை. |
| 15. | ஆர். பூங்கொடி | - | நாகசேனை மே.பி. லிந்துலை. |
| 16. | என். நாகேஸ்வரி | - | பூண்டுலோயா கீ.பி. பூண்டுலோயா. |
| 17. | எம். இரவி | - | வெள்ளிக்குளம், வவுனியா. |
| 18. | க. பூபாலசிங்கம் | - | இங்கிய டிவிசன், ரொசல்ல. |
| 19. | எம். தாஸ் பெர்னான்டோ | - | லோகி தோட்டம், தலவாக்கலை. |
| 20. | செ. செல்வகுமார் | - | இல. 05, லிடெஸ்டேல் வீதி, ஆள்கரனோயா. |
| 21. | இரா. தேவிகா | - | இல. 59, சென்ஜோன்ஸ்ஹில், மடுல்கெல. |
| 22. | சு. பிரேமராணி | - | இல. 68, பருசுலா வீதி, யட்டியந்தொட்ட. |
| 23. | சி. சாரதாம்பாள் | - | இல. 150/40, மிடில்டன், தலவாக்கலை. |
| 24. | த. ஜெயகாந்தன் | - | இல. 253, வீடமைப்புத் திட்டம், காத்தார் சின்னக்குளம், வவுனியா. |
| 25. | து. நவரட்ணஜோதி | - | இல. 132, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி. |

# முத்தமிழ் கலா மன்ற உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| காப்பாளர்கள் | : | திரு. எஸ். ஜெயக்குமார் (முதல்வர்)<br>திரு. ப. ஸ்ரீதரன் (பிரதி முதல்வர்) |
| பொறுப்பு விரிவுரையாளர்கள் | : | திரு. ஜே. லெனின் மதிவாணம்<br>திரு. ஜே. சற்குருநாதன்<br>திருமதி. ச. கிங்ஸ்லி |
| தலைவர் | : | திரு. கே. சுந்தரராஜ |
| உப தலைவர் | : | திரு. எஸ். ஐ. குரூஸ் |
| செயலாளர் | : | திரு. எஸ். விஜயகோபால் |
| உப செயலாளர் | : | திருமதி. டி. சூரியகலா |
| பொருளாளர் | : | திருமதி. எஸ். திலகவதி |
| பத்திராதிபர் | : | திரு. வீ. சசிக்குமார் |

திருமதி. வீ. புவனேஸ்வரி
திரு. ஆர். ஜெயசீலன்
செல்வி. எஸ். சத்தியவாணி
திரு. ஆர். சதானந்தன்
திருமதி. ஆர். கலையரசி
செல்வி. பீ. மணிமேகலை
திரு. எஸ். ஜெயராஜ்
திரு. கே. முரளிதரன்
திரு. எம். சித்ரானந்தன்
திருமதி. எம். விஜயலட்சுமி
செல்வி. கிருஸ்ணவேணி
திருமதி. ஜே. கலைவாணி
செல்வி. எஸ். விஜயபாரதி
செல்வி. வீ. பிரியதர்ஷினி
செல்வி. பீ. இந்துமதி
செல்வி. கே. மதிவதனி
செல்வி. எம். புஷ்பம்

திரு. வீ. பார்த்தீபன்
திரு. எஸ். ராஜ்குமார்
திரு. எம். ரவி
திரு. எஸ். சத்தியசீலன்
திரு. டி. ஜெயகாந்தன்
திரு. பீ. ராஜபதி
திரு. எஸ். இளங்குமார்
திரு. டி. நவரட்ணஜோதி
திரு. பீ. ஜெகதீஸன்
திரு. எஸ். மகேஸ்வரன்
திரு. எஸ். செல்வகுமார்
திரு. ஐ. மகேந்திரன்
திருமதி. கே. சாரதாம்பாள்
செல்வி. ஐ. வளர்மதி
திருமதி. பீ. நிர்மலா
செல்வி. கே. சிவகுமாரி
செல்வி. கே. கிருபைநாயகி

செல்வி. டி. சகுந்தலாதேவி
செல்வி. எஸ். விஜயகௌரி
திரு. எஸ். சிவக்குமார்
செல்வி. கே. காஞ்சனா
திரு. கே. விநாயகமூர்த்தி
திரு. ஆர். லிங்கேஸ்வரன்
திரு. பீ. பூபாலன்
திரு. வீ. தயாபரன்
திருமதி. ஜீகே. அருட்செல்வி
செல்வி. எம். கனகசுந்தரி
திருமதி. யு. தங்கேஸ்வரி
செல்வி. ஜே. தேவரூபா
திருமதி. வீ. செல்வராணி
திருமதி. டி. சந்திரகலா
செல்வி. எஸ். சுமித்ராதேவி
செல்வி. எஸ். கலாமதி
திரு. ஏ. அமலேஸ்வரன்

# நன்றி நவிலல

கலையும் இலக்கியமும் சமுதாயம் எனும் விளைநிலத்தின் பயிர் என்ற பிரக்ஞையோடு உருவாக்கப்பட்ட 'தேட்டம்' சுவர் சஞ்சிகையின் இரண்டாவது இதழ் வெளிவருகின்றது. இவ்விதழின் காத்திரத்திற்கு பல வழிகளில் பங்களிப்பு நல்கிய........

**காப்பாயர்கள் :**
திரு. செ. ஜெயகுமார் (முதல்வர்), திரு. ப. ஸ்ரீதரன் (பிரதி முதல்வர்), திரு.எஸ்.இதயராஜா (உப அதிபர்)

**பொறுப்பு விரிவுரையாளர்கள் :**
திரு. லெனின் மதிவாணம், திரு. ஜெ. சற்குருநாதன், திருமதி. ச. கிங்ஸ்லி

**ஆக்கங்களை திருத்தியவர்கள் :**
திரு. எம். ஜேம்ஸ் விக்டர் (ஆசிரிய ஆலோசகர்), திரு. ச. பன்னீர்செல்வம் (ஆசிரியர், ரிலாமுல்ல த.வி.)

**அட்டைப்படம் :**
திரு. து. நவரட்ணஜோதி (ஆசிரய மாணவன் இரண்டாம் வருடம்)

**அச்சகம் :**
ஹில்பிரைன் அச்சகம் அட்டன்.

**கணனிப்பதிப்பு.**
செல்வி. ந. உமாவதனி

**முத்தமிழ் கலாமன்ற உறுப்பினர்கள் :**
கொ. சுந்தரராஜ் (தலைவர்), சு. திலகவதி (பொருளாளர்), வீ. சசிகுமார் (பத்திராதிபர்), மற்றும் உறுப்பினர்கள், பொருளாதார உதவி நல்கியோர்,

யாவருக்கும் எனது பற்றுக்கோடான நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றியுடன்
திரு. பெ. விஜயகோபால்
செயலாளர் முத்தமிழ் கலா மன்றம்.

*With best compliments from*

# ANUSHA



## JEWELLERS

***Guaranteed 22kt Sovereign Gold Jewellers***
***& Wedding cards***

No. 32A, Main Street,
Hatton.
Tel : 051-22410



**Printed & Designed by Hillbrain Printers - Fruithll Hatton. T.P. 077-519159**